அழகிய கலைநயம் மிக்க
புதுமையான
22 KT
தங்க நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
தொலைபேசி: 23628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/50

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

பெண்மைக்கு மெருகேற்றும்
இளமைக்கு எழிலூட்டும்
தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி; 23628

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஸூ கார்த்திகை மீ 24 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 07 (10-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 1

# கருணாநிதி உட்பட 5000 தொண்டர் தமிழகத்தில் கைது!



சென்னை, டிச.10

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில், இந்தி ஆட்சிமொழி என்று கூறும் அரசியல் சாசனத்தின் 17ஆவது பிரிவை எரித்த தி மு க. தலைவர் கலைஞர் கருணாநிதி உட்பட சுமார் 5000 தொண்டர்கள் நேற்று கைது செய்யப்பட்டனர்.

அனைவரையும் 14 நாள் விளக்கமறியலில் வைக்கும்படி அந்த அந்தப் பகுதி நீதிவான்கள் உத்தரவிட்டனர். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் இறுதிநாள் நேற்று.

அரசியல் சாசனத்தின் 17ஆவது பிரிவு இந்தி ஆட்சிமொழி என்று கூறுகிறது.

அந்தவாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்களையே திரு. மு. கருணாநிதியும் ஏனைய தொண்டர்களும் எரித்தனர்.

அப்போது பொலீஸார் அனைவரையும் கைதுசெய்தனர்.

சென்னை நகரில் மட்டும் திரு. கருணாநிதியுடன் சுமார் 600 தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

எரிப்பதற்கு முன்னர் திரு. கருணாநிதி, வள்ளுவர் கோட்டம் முன்பாக தொண்டர்கள் மத்தியில் பேசினார்.

"இந்திய அரசியல்சாசனத்தை நாம் மதிக்கின்றோம்.

இந்திமொழியுடன் தமிழும் ஆட்சிமொழியாக வேண்டும்

அதற்கு ஏற்ற விதத்தில் இந்திய அரசியல் சாசனம் திருத்தப்பட வேண்டும்" —

இப்படி கலைஞர் கருணாநிதி சொன்னார்.

அரசியல் சாசனத்தை எரித்ததற்காக திருச்சி மாவட்டத்தில் 1500 பேர் தஞ்சை மாவட்டத்தில் 2,335 பேர், புதுகோட்டை மாவட்டத்தில் 675 பேர், நாகர் கோயில் மாவட்டத்தில் 34 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

இதனிடையில் சென்னை தியாகராயநகரில் உள்ள இந்தி பிரசார சபைக் கட்டடம் குண்டு வெடிப்பினால் சேதமடைந்தது.

ஏற்கனவே இந்திய அரசியல் சாசனத்தின் 17 ஆவது பிரிவை எரித்ததற்காக தி. மு. க. சட்டசபைத் தலைவர் திரு. அன்பழகன் உட்பட 7 தி.மு.க. எம். எல் ஏ. க்கள் பொலீஸாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

அத்துடன் அந்த ஏழு எம் எல்.ஏ.க்களும் பதவிகளை இழந்தனர் என்று சபாநாயகர் பாண்டியன் தீர்ப்பு அளித்ததும் குறிப்பிடத்தக்கது. (இ–எ)

# திருமலை மாவட்ட சரித்திர சான்றுகளை

# சேகரிப்பதில் இந்தியா தீவிரம்

புதுடில்லி, டிச. 9

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமங்கள், பட்டினம் முதலியனவற்றின் சரித்திரச் சான்றுகளைச் சேகரிப்பதில் இந்திய அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

தமிழருக்குரிய பாரம்பரிய பூமிகள் இவைகள் என்பதை நிரூபிக்கும் சரித்திரச் சான்றுகளை இலங்கையுடனான அடுத்த கட்டப் பேச்சுக்களின் போது இந்தியா முன்வைக்க இருக்கிறது.

இப்படி இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

திருகோணமலை மாவட்டத்தில் தென்னமரவடி, திரியாய், கந்தளாய், தம்பலகமம், மூதூர் உட்பட பல கிராமங்கள் தமிழரின் பாரம்பரிய பூமிகள் என்பதை நிரூபிக்கும் சான்றுகளே தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன. (அ–எ-21)

## ராணுவம் பாவிக்கும் கிரனேட் குண்டுகள்

### கொழும்பு கள்ளச் சந்தையில்!

கொழும்பு, டிச. 10

இராணுவத்துக்குச் சொந்தமான கிரனேட் குண்டுகள் கொழும்பு கள்ளச் சந்தையில் விற்கப்படுகின்றன.

36 எம் கிரனேட் ஒன்று 750 ரூபாவுக்கு விற்கப்படுகின்றதாம்.

இப்படி விற்கப்பட்ட குண்டு ஒன்று ராஜகிரியாவில் உள்ள கொள்ளைச்சந்தேக நபரின் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டது.

அந்த நபர் அவசரகாலச்சட்ட விதிகளின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

கிரனேட் விற்பனை சம்பந்தமாக திருமலையில் பணிபுரியும் சிப்பாய் ஒருவரை பொலிஸார் விசாரிக்க இருப்பதாக கொழும்புச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வல்வையில் மீனவர்மீது துப்பாக்கிச் சூடு!

வல்வெட்டித்துறை டிச 10

மீன்பிடிக்க படகில் சென்ற மீனவர்கள் மீது வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது.

இதன் காரணமாக வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த முத்துக்குமார் இரத்தினகுமார். (24 வயது) என்பவர் படு காயமடைந்தார்.

நேற்றுப் பகல் இவர் மீன்பிடிக்க படகு ஒன்றில் கடலுக்கு சென்றார் என்றும் அப்பொழுது கடலில் பலத்த காற்று வீசியதன் காரணமாக படகு முகாம் பக்கமாக அடித்துச் செல்லப்பட்டது என்றும் தெரிய வருகிறது.

இதனை அடுத்தே சிப்பாய்கள் படகு மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

காயமடைந்தவர் புலோலி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபின் யாழ் ஆஸ்பத்திரிக்கு மாற்றப் பட்டார். (இ–160)

### சுபநேரம்

10—12—1986

புதன்கிழமை

சுபநேரம்:

4.49 முதல் 6.19 வரை

ராகுகாலம்:

12.19 முதல் 1.49 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி காலை 6. 31 வரை

திருவெம்பாவை

மூன்றும்நாள்

## தவறுதலாக வெடித்த துப்பாக்கி

யாழ்ப்பாணம், டிச. 10

ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இரண்டு சிங்களவர் காயமடைந்தனர்.

வவுனியாவில் இருந்து மூன்று மைல் தொலைவில் உள்ள மாமடுவ கிராமத்தில் இச்சம்பவம் கடந்த ஞாயிறு இடம்பெற்றது.

காயமடைந்தவர்கள் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். (இ–ஐ–எ)

## இன்று சீட்டிழுப்பு

யாழ்ப்பாணம், டிச, 10

தமிழ் ஈழ இராணுவத்தின் இரண்டாவது அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு இன்று நடைபெறுகிறது.

இன்று மாலை 5-30 மணி அளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய முன்றலில் பொதுமக்கள் முன்னிலையில் அதிஷ்டம் பார்க்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். (இ–10)

## ஊறணி சந்தியில் அதிரடிப்படை முகாம்

மட்டக்களப்பு, டிச. 10

மட்டக்களப்பு நகரில் ஊறணிச் சந்தியில் அதிரடிப்படை முகாம் ஒன்று நேற்று திறக்கப்பட்டது.

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் ஊறணிச் சந்தியில் உள்ள தனியார் நிறுவனத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்றில் இந்த முகாம் அமைக்கப்பட்டுள்ளது. (இ–எ–21)

## அடைமழை மத்தியிலும் ஷெல்தாக்கு

யாழ்ப்பாணம், டிச.10

நேற்று யாழ் நகரில் அடைமழை பெய்து கொண்டிருந்தபோது கோட்டை முகாமில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கடற்கரை வீதியை நோக்கி துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த சில தினங்களுக்குப் பின்னர் இடம்பெற்ற இச்சம்பவங்களால் நகரில் சிறிது பதற்றம் நிலவியது. (இ–10)

## மா இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச 10

காங்கேசன் துறை முகத்துக்கு வந்துள்ள மத்துறட்ட கப்பலிலிருந்து மாஇறக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் இதனைத் தெரிவித்தார் (இ–5)

## மாணவிகள் இரத்ததானம்

யாழ்ப்பாணம், டிச. 10

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகள் யாழ்-ஆஸ்பத்திரி இரத்த வங்கிக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரத்ததானம் செய்தனர்.

யாழ்-இரத்த வங்கி பொறுப்பதிகாரி டாக்டர் கே. சுதாகரன் தலைமையில் பருத்தித்துறைக்கு சென்ற குழு இரத்தம் சேகரித்தது.

பாடசாலை அதிபர் திருமதி இ. அரியரத்தினம் மற்றும் ஆசிரியைகள் இரத்ததானம் செய்வதற்கு மிகவும் உதவி புரிந்தனர்.

மாணவிகள் இப்படி முன்வந்து இரத்ததானம் செய்தது மற்றவர்களுக்கும் ஓர் எடுத்துக் காட்டாகும் என்று டாக்டர் கே. சுதாகரன் 'உதயன்' செய்தியாளரிடம் தெரிவித்தார்.

மாணவர்களும் மற்றும் ஆண்களும், இந்த விடயத்தில் அதிக அக்கறை காட்டி உயிர் ஆபத்தில் உள்ள நோயாளர்களைக் காப்பாற்ற முன்வர வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார். (இ–10)

முச்சந்தி முனி



கிரனேட் வெளியிலே போனமாதிரி ஆயுதங்களும் வெளியிலே போச்சுதோ ஆருக்குத் தெரியும்... ! உதுகளிலை எத்தினை கொமிஷன் விஷயங்கள் எல்லாம் தங்கியிருக்குத் தெரியுமே...?

## மட்டக்களப்பில் அமைதி நிலவுகிறது

மட்டக்களப்பு, டிச. 10

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைதி நிலவுகிறது.

நிலைமை வழமைக்குத் திரும்பிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு-கல்முனை வீதியில் போக்குவரத்து எதுவும் நடைபெறவில்லை.

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் வாகனங்கள் வெள்ளைக் கொடியுடன் செல்கின்றன.

தேற்றாத்தீவுப் பகுதியில் 5 முஸ்லிம்கள் கடத்தப்பட்டனர் என்றும் அவர்களில் இரண்டு பேர் விடுவிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

விடுவிக்கப்படாத மூவரின் நிலைமைபற்றிதகவல் எதுவும் தெரியவில்லை.

மட்டக்களப்பு இரண்டாவது எம். பி. பிஸ்வி சின்ன லெப்பையின் சமாதான வேண்டுகோள், காத்தான்குடி பள்ளி வாசலில் அடிக்கடி ஒலிபரப்பப்படுகின்றது. (இ–எ–21)

## நேற்று கடும் மழை

யாழ்ப்பாணம், டிச. 10

யாழ்ப்பாணத்தில் நேற்று பெய்த கடும்மழை காரணமாக பல இடங்களில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

யாழ், பஸ்நிலையப் பகுதியிலும், வின்சர் சந்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வங்கி ஊழியர் மூவர் பூஸாவில்

திருகோணமலை, டிச, 10

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் திருமலையில் கைதான 3 இலங்கை வங்கி ஊழியர்கள் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.

இவர்களில் இருவர் பெண் ஊழியர்களாவர். (இ–எ)

## பெங்களூரில் 16 பேர் பலி

பெங்களூர், டிச. 9

நபிகள் நாயகம் பற்றிய சிறுகதை பிரசுரமானதைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்களில் இறந்தோர் தொகை 16 ஆக உயர்ந்துள்ளது. 80 பேர் படுமோசமாக காயமடைந்துஉள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (ஒ)

தாமாக வரவில்லை!

# ஜே.ஆரின் அழைப்பின் பேரிலேயே

## சிதம்பரம் குழு கொழும்பு வருகிறது

சென்னை, டிச. 9

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் அழைப்பின் பேரில்தான் இந்திய இணை அமைச்சர் குழு கொழும்பு வருகிறது.

17, 18, 19 ஆம் திகதி பேச்சுக்களை நடத்த வரும்படி ஜனாதிபதி அழைப்பு விட்டிருந்தார்.

இப்படி பிரபல அரசியல் விமர்சகர் ஜி. கே. ரெட்டி 'இந்து'வில் எழுதியிருக்கிறார்.

இணை அமைச்சர் குழுவுடன் இந்திய சிரேஷ்ட அதிகாரிகளும் இம்முறை கொழும்பு செல்ல இருக்கின்றனர்.

அதற்கு முன்னர் இம் மாதம் 12, 13ஆம் திகதிகளில் சென்னை சென்று இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சகல அம்சங்களிலும் தமிழர் அமைப்புக்களின் கருத்துக்களை இணை அமைச்சர் குழு பெறும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு மூன்று அம்சங்களே முட்டுக்கட்டையாக உள்ளன

ஒன்று: மத்திய அரசுக்கும் மாகாண அமைப்புக்கும் இடையேயான பொதுவான விஷயங்கள்

இரண்டு: ஆளுநருக்கு (கவர்னருக்கு) உரிய அதிகாரங்கள்.

மூன்று: இரண்டு

(4ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு

## இ. போ. ச. ஊழியர் வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது

மட்டக்களப்பு, டிச. 10

காத்தான்குடிப் படுகொலையைத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்து வந்த இ.போ.ச. ஊழியர்களின் கோரிக்கைகளை கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை ஏற்றுக்கொண்டது.

அதைத் தொடர்ந்து ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டார்கள்.

கடந்த சனிக்கிழமை காலை காத்தான்குடியில் வைத்து இ. போ. ச. ஊழியர்கள் 11 பேர் ஊர்காவல் படையினரால் படுகொலை செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து இந்த வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

ஊழியர்கள் முன் வைத்த கோரிக்கைகள் வருமாறு;

* உயிரிழந்த 55 வயதுக்குட்பட்ட ஊழியர்

(4-ம் பக்கம் பார்க்க)

## பிக்கு சிப்பாயாக மாறினார்!

கொழும்பு, டிச 10

பத்து ஆண்டுகள் பிக்குவாக இருந்தவர் இப்போது சிப்பாயாக இராணுவத்தில் இருக்கிறார்.

பிக்குவாக இருந்த சமயம் அவரின் பெயர் நந்த.

சிப்பாயாக சேர்ந்த பின்னர் அவரின் பெயர் பத்மலால்-

இவர் காலி வாசி ஆவர். (இ–ஐ–எ)

சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதல்:

# சிங்கராயர் மீதான விசாரணை மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, டிச. 10

சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தாக்குதல் சம்பந்தமாக வண.பிதா ஆபரணம் சிங்கராயருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு விசாரணைகடந்த திங்கட்கிழமை கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மீண்டும் ஆரம்பமானது.

அப்போது யாழ் போதனா ஆஸ்பத்திரி சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜே. ரி. சேவியர் சாட்சியமளித்தார்.

டாக்டர் சேவியர் சொன்னதாவது;

வண.பிதா ஆபரணம் சிங்கராயர் ஆஸ்பத்திரிக்கு வந்து, சாவகச்சேரி பொலீஸ் நிலையத் தாக்குதலில் காயம் அடைந்தவர்களை வந்து பார்க்கும் படி கேட்டுக் கொண்டார்.

வண.பிதா சிங்கராயரை அதற்கு முன்னர் எனக்குத் தெரியாது.

வெளியில் போய் ஒருவரையும் பார்க்க மாட்டேன் என்றும் அவர்களை ஆஸ்பத்திரிக்கு அல்லது நேர்சிங் ஹோமுக்குக் கொண்டு வரும்படியும் நான் வண.பிதா சிங்கராயரைக் கேட்டுக் கொண்டேன்.

மதகுரு என்ற முறையில் உதவி கேட்டு வருபவருக்கு உதவவேண்டி

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விவசாய அறிவை மேம்படுத்தி விவசாய துறையில் முன்னேறலாம்

கரவெட்டி, டிச 10

விவசாயிகள் தமது விவசாய அறிவை மேம்படுத்துவதன் மூலம் விவசாயத்துறையில் முன்னணியில் திகழமுடியும்,

அச்சுவேலி இடைக்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் யாழ் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர், திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. வே. கந்தசாமி தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. கிருஷ்ணபிள்ளை மேலும் குறிப்பிடுகையில்,

விவசாயிகளுக்கு விவசாய அபிவிருத்தி மேம்பாட்டிற்கான ஆலோசனைகள், உதவிகள் போன்றன வழங்கப்பட வேண்டும்.

இதற்கு விவசாயக் கருத்தரங்குகள் போட்டிகள் வழி வகுக்கின்றன என்றார்.

யாழ் விவசாயத் திணைக்கள பாடவிதான உத்தியோகத்தர்களான திருமதி தனவதி கந்தசாமி, திரு. வி. கதிரமலை, திரு. எஸ் ஆறுமுகசாமி ஆகியோர் பேசினர்.

கருத்தரங்கை வலி வடக்கு வடபகுதி ப. நோ. கூ. சங்கம், புத்தூர் விவசாய விரிவாக்க நிலையம், அச்சுவேலி சன சமூக நிலையங்களின் ஒன்றியம், அச்சுவேலி இளைஞர் விவசாயக் கழகம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்தன. (இ-70)

## இலவச பாடப் புத்தகம்

மானிப்பாய், டிச. 10

1987 ஆம் ஆண்டுக்கான பாடசாலை இலவச பாடப் புத்தகங்கள் வழங்குவது சம்பந்தமான நடவடிக்கைகளை கல்வி வெளியீட்டுத் திணைக்கள இலவச நூல் வெளியீட்டு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (இ - 90)

## மத்திய கிழக்கில் இன்னும் நல்லதொழில் வாய்ப்பு இருக்கிறதாம்

கொழும்பு, டிச. 10

மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கையருக்கு நல்ல தொழில் வாய்ப்புக்கள் இன்னும் இருக்கின்றன.

இப்படி தொழில் அமைச்சின் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பிரிவுத் தலைவர் திரு. டேவிட் சொய்சா தெரிவித்தார்.

டுபாயில், ஆடை தைக்கும் இயந்திரப் பயிற்சி பெற்ற பெண்களுக்கு நிறைய தொழில் வாய்ப்பு உண்டு.

அதுபோன்று தொழில் நுட்பப் பயிற்சி பெற்ற ஆண்களுக்கும் டுபாயில் வாய்ப்பு உண்டு.

இப்படி திரு. டேவிட் சொய்சா சொன்னார். (இ - ஐ - எ)

# தமிழரின் காணிகளில் சிங்களவர் விவசாயம்

## திருமலை அரச அதிபரிடம் புகார்

யாழ்ப்பாணம், டிச. 10

திருமலை மாவட்டத்தில் பாரம்பரியமாக தமிழர்களினால் நெற் செய்கை பண்ணப்பட்டு வந்த காணிகளில் சிங்களவர்கள் இம்முறை நெற் செய்கை பண்ண முயற்சி செய்து வருகிறார்கள்.

இது சம்பந்தமாக இப்பகுதி மக்கள் திருமலை அரச அதிபரிடம் புகார் செய்துள்ளனர்.

திருமலை மாவட்டத்தில் இடம்பெற்று வந்த கலவரங்கள் காரணமாகவும், இராணுவத் தாக்குதல் காரணமாகவும் பல விவசாயக் கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான தமிழர்கள் இடம் பெயர்ந்துள்ளனர்.

இதன் காரணமாக இவர்களால் பாரம்பரியமாக செய்கை பண்ணப்பட்டு வந்த நெற்காணிகளும் கடந்த காலங்களில் செய்கை பண்ணப் படவில்லை

தமிழர் வெளியேறியதைக் காரணமாக வைத்து, சேருவில, திரியாய், கந்தளாய், அல்லை, கட்டைபறிச்சான் ஆகிய கிராமங்களில் சிங்களவர்கள் இம்முறை நெற் செய்கை பண்ண முயற்சித்து வருகின்றனர்.

இந்த நடவடிக்கையை நிறுத்தும்படி திருமலை மாவட்ட அரசாங்க அதிபர் கேட்டுள்ளார். (இ - 10)

## அவர் சத்தியம் செய்தார்! அதன்படி பாம்பு கடித்தது!!

கொழும்பு, டிச 10

''நான் பொய்ச்சத்தியம் செய்து இருப்பின் இன்றில் இருந்து ஏழு தினங்களுக்குள் பாம்பு கடித்து இறப்பேன்.''—

இப்படிச் சொன்னவர் சொன்னபடி பாம்பு கடித்து உயிரிழந்தார்.

இச்சம்பவம் புளத்சிங்கள என்னும் இடத்தில் இடம் பெற்றது.

கே. சோமபால, வயது 19. ஒருவரிடம் இருந்து 220 ரூபாவைத் திருடியதாக இவர் மீது முறைப்பாடு செய்யப்பட்டது.

சோமபாலாவோ தான் அப்படித் திருடவில்லை என்று வாதிட்டார்.

அப்படி நான் திருடியிருந்தால் ''ஏழு தினங்களுக்குள் பாம்பு கடித்து இறப்பேன்''- என்றும் சோமபால தெரிவித்தார்.

அதற்கு இணங்க சோமபாலா தான் அப்பணத்தைத் திருடவில்லை என்று கோயில் ஒன்றில் சத்தியம் செய்தார். முறைப்பாட்டுக்காரப் பெண்ணும் கோயிலில் சத்தியம் செய்தார். சோமபாலாதான் பணத்தைத் திருடியதாக!

ஏழு நாள் காலக்கெடு முடியும் முன்னரே சோமபால பாம்பு கடித்து மரணமானார்.

புளத்சிங்கள மரண விசாரணை அதிகாரி திரு. ஐ. ஏ. டி. பி. குணதிலக முன்னிலையில் நடந்த மரணவிசாரணையில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது

பாம்பு கடித்ததினால் 'மரணம்' சம்பவித்தது' என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (இ-எ)

## ஒரு வருடச் சிறை

மட்டக்களப்பு, டிச. 10

மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரான சந்திரசேகரம் தயாநிதிக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஒரு வருட கடுழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

1983 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சிறைச்சாலை உடைப்பில் ஈடுபட்டவர்கள் தொடர்பாக தகவல்கள் தெரிந்தும் பொலீஸாருக்குத் தகவல் கொடுக்க தவறினார் என இவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. (இ - 21)

## மனித உரிமைகள் தினம் இன்று

### வை. எம். சி. ஏயில் வைபவம்

யாழ்ப்பாணம், டிச, 9

மனித உரிமைகள் தினம் இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணி அளவில் யாழ் வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெறும்.

பொது நூலகத்தின் சுண்டிக்குளிக்கிளை இதனை ஒழுங்கு செய்துள்ளது.

மனித உரிமை மீறலால் உயிரிழந்தோரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை கூட்டம் ஆரம்பத்தில் இடம் பெறும்.

யாழ் பல்கலைக்கழக சிரேஷ்ட கல்வித்துறை விரிவுரையாளர் திருமதி கு. பரராசசிங்கம் தலைமை வகிப்பார்.

மனித உரிமைப் பிரகடனமும் கருத்துக்களும் என்ற தலைப்பில் திரு. நா. மயில்வாகனமும், மனித உரிமைகளும் எங்கள் கடமைகளும் என்ற தலைப்பில் பேராசிரியர் கு. நேசையாவும் உரை நிகழ்த்துவர். (இ-எ)

# உரிமைப் போரை நசுக்க முற்படுவோரை அடக்க முடியாதா?

## பல்கலைக்கழக மாணவர் அறிக்கை

யாழ்ப்பாணம், டிச,10

உரிமைப்போரை நசுக்க முற்படுவோரை அடக்க முடியாதா?

இப்படிக் கேட்டு பல்கலைக்கழக மாணவர்கள் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

அறிக்கை விவரம் வருமாறு:-

எமது சாகும் வரை உண்ணா விரதப்போராட்டத்திற்கு பிறகு நாம் ஓர் அமைதியான பிரசாரப் பாதயாத்திரை ஒன்றை நடத்தினோம்.

மக்கள் என்ற போர்வைக்குள் ஒளிந்து கொண்ட அராஜகவாதிகளாலும் அதன் அடிவருடிகளாலும் திட்டமிட்டு பல இடங்களில் பாதயாத்திரை குழப்பப்பட்டுள்ளது.

பருத்தித்துறையில், கரவெட்டி கிழவி தோட்டத்தில் வைத்து, தடிகள் பொல்லுகள் தாங்கிய காடையர் கூட்டம் பல பொது மக்களையும் மாணவர்களையும், மாணவிகளையும் தாக்கி பாதயாத்திரையைக் கலைத்துக் குழப்பி விட்டது

இதன் உச்சக்கட்டமாக சாவகச்சேரி மட்டுவில் மகாவித்தியாலயத்தில் தங்கியிருந்த எமது பாத யாத்திரிகர்களை கிறனைட் கைக்குண்டுகள், கைத்துப்பாக்கிகள் சகிதம் புகுந்த காடையர் கூட்டம் தாக்கியது.

நள்ளிரவை அண்மித்துக் கொண்டிருந்த வேளையில் மின் விளக்குகளை அடித்து நொறுக்கி விட்டு தடிகள், சங்கிலிகள், பொல்லுகள் சகிதம் புகுந்த கூட்டம் மாணவர்களின் தலைகளிலும், உடலெங்கிலும் மிருகத்தனமாகத் தாக்கிற்று

இயக்கங்களே! தமிழ் மூப் போராட்டம் எங்கே போகின்றது? விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் ஒரு பாசிஸ சர்வாதிகாரம் நிறுவப்படுகின்றதா? இயக்கங்களின் கட்டுப்பாட்டிலுள்ள குடாநாட்டில் கிறனைட்டுகளுடன் புகுந்து உரிமைப் போரை நசுக்க முற்படும் இவர்களெல்லாம் யார்? இவர்களை உங்களால் அடக்க முடியாதா? அல்லது இவற்றுக்கு நீங்களும் துணை போகின்றீர்களா?

மக்களை நேசித்து மக்களுக்காகப் போராடப் புறப்பட்ட நீங்கள் இவர்களை அம்பலப்படுத்த வேண்டும். பகிரங்கமாக மக்கள் தீர்ப்புக்கு விட வேண்டும். தேச விடுதலைப் போராட்டத்தை வளப்படுத்தும் எமது போராட்டத்தை அங்கீகரித்துள்ள உங்களால் அராஜகவாதிகளை ஏன் அம்பலப்படுத்த முடியவில்லை? மக்கள் வெறுப்படையாமல் ஏன் போராட்டம் நடத்த முடியவில்லை?

இப்படி அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (இ)

மக்கள் முகம்

## நலன்புரிச் சங்கம் அங்குரார்ப்பணம்

வேலணை, டிச.10

தீவுப் பகுதிக்கான பத்திரிகையாளர், எழுத்தாளர் வாசகர் நலன் புரிச் சங்க அங்குரார்ப்பண கூட்டம் அண்மையில் வேலணை முருகன் கோவில் முன்றலில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. க. ஜெயச்சந்திரமூர்த்தி செயலாளர்: திரு. இ. சற்குருநாதன், பொருளாளர்: திரு.கா.கணேசலிங்கம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள் திரு. ம. அம்பிகைபாகன் நயினாதீவு, திரு. என். இராமச்சந்திரன் மண்டைதீவு, திரு. த. விக்டர் செல்வம் வேலணை, திரு. மணிசேகரம் சரவணை. (இ-167)

## புற்றுநோய் அறிவுப் போட்டி

மானிப்பாய், டிச. 10

வடமாகாணப் புற்றுநோய் சங்கத்தினர் அண்மையில் நடத்திய புற்றுநோய் அறிவுப் போட்டியில் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியைச் சேர்ந்த ஜனாப் ஏ. ஜே. முகமது ஸல்மி முதற் பரிசைப் பெற்றார்.

இரண்டாவது பரிசை பருத்தித்துறை மெதடிஸ்த மகளிர் கல்லூரியைச் சேர்ந்த சந்திரவதனி பத்மநாதனும், மூன்றாவது பரிசை வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த உமாபதி தாமோதரம்பிள்ளையும் பெற்றனர். (இ - 90)

ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை
விசேட வகுப்பு
ஆரம்பம்:
த. ந. பஞ்சாட்சரம்
துரித, விரிவான, விளக்கமான கற்கை நெறி; அச்சிடப்பட்ட பாடத்திட்டத்திற்கமைவான பயிற்சிகள், மாதிரிக் கட்டுரைகள், கடிதங்கள் உட்பட.
நிர்வாகி,
கஜூஸ் சயன்ஸ் அக்கடமி
கோவில் முன் வீதி, நல்லூர்.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

கிளிநொச்சியில்

## 95 ஆயிரம் பேருக்கு உணவு முத்திரை

கிளிநோச்சி, டிச,10

கிளிநொச்சிவாழ் மக்களில் சுமார் 95 ஆயிரம் பேருக்கு இம்முறை வறுமை நிவாரணத் திட்டத்தின்கீழ் உணவு முத்திரை வழங்கப்பட்டுள்ளது,

இது கடந்த காலத்தில் வழங்கப்பட்டதிலும் 45 வீதம் அதிகமாகும்

கிளிநொச்சி அபிவிருத்தி சம்பந்தமாக கிளிநொச்சி குருகுல இல்லத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய கிளிநொச்சி மாவட்டச் செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு ஜெ செந்தில்நாதன் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கிராம அபிவிருத்தி ஒன்றியம், பிரசைகள்குழு, அத்தியாவசிய சேவைகள் குழு என்பவற்றால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கலந்துரையாடல் கிளிநொச்சி பிரசைகள் குழுவின் தலைவர் திரு த. சுப்பிரமணியம் (நீர்ப்பாசனப் பொறியியலாளர்) தலைமையில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிகாரிகள், வங்கி அதிகாரிகள் உட்பட பல அதிகாரிகள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில் கிராம அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் நா. வேலாயுதம். பிரசைகள் குழுவின் பொருளாளர் எஸ். சிவராசலிங்கம், அத்தியாவசிய சேவைகள் குழுவின் தலைவர் திரு. எம் இராமநாதன், மகளிர் அமைப்பின் தலைவி திருமதி எஸ். சோமசேகரம், குருகுல நிர்வாகி திரு. அ. கதிரவேலு உட்படப் பலர் உரையாற்றினர். (இ-76)

## பிரசைகள் குழுவுக்கு புகார்

மட்டக்களப்பு, டிச. 10

கடந்த மாதம் சந்திவெளியில் நடைபெற்ற அசம்பாவிதத்தை அடுத்து மாணவன் உட்பட ஆறு பொதுமக்கள் சந்திவெளி முகாம் படைவீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் என்று பிரசைகள் குழுவிற்கு புகார் செய்யப்பட்டுள்ளது. (இ - 12)

உயிர் காக்கும் சஞ்சீவி
இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.
மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்
உயிர் காப்பது உன்னத பணி
யாழ். ஆஸ்பத்திரி
இரத்த வங்கி
உங்கள் வரவை எதிர்பார்த்து நிற்கிறது!
இரத்த தானம் செய்யுங்கள்!
விரைந்து செய்வீர்!!
தொடர்ந்து செய்வீர்!!!
தானத்தில் சிறந்தது இரத்ததானம்

# வள்ளங்களில் அளவோடு பயணிகளை ஏற்ற வேண்டும்

## தீவக அபிவிருத்திக் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிச 10

அராலி — வேலணை கடற் போக்குவரத்தில் ஈடுபடும் வள்ளங்களில் அளவோடு பயணிகளை ஏற்ற வேண்டும்.

இப் போக்குவரத்துக்குப் பொறுப்பானவர்கள் கடுமையான கட்டுப்பாட்டை இது குறித்து விதிக்க வேண்டும்.

தீவுப் பகுதி அபிவிருத்திக் கழகம் அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

அராலி — வேலணை கடற் போக்குவரத்து தீவுப்பகுதி மக்களுக்கு மேலும் அவலத்தை உண்டு பண்ணுவதாக மாறிக் கொண்டு இருப்பதை அண்மைக் கால சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அளவுக்கு அதிகமான பயணிகள் ஏற்றப்பட்டதால் இரு படகுகள் கவிழ்ந்து போயின.

வள்ளம் ஓட்டிகளுக்கு பயணிகள் வேண்டுகோள்கள் விடுத்தும் அவர்கள் கேட்பதாக இல்லை.

இச்செயல் தொடருமானால் படகு கவிழ்ந்து பல உயிரிழப்புகள் ஏற்படலாம்.

ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் வள்ளமோட்டிகளுக்குக் கடுமையான கட்டுப்பாட்டை விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. இப்படி தீவுப்பகுதி அபிவிருத்திக் கழகம் தனது அறிக்கையில் கோரியுள்ளது. (இ - எ)

# உணவு முத்திரை மூலம் அகதிகள் பிரச்சினை தீர்ந்து விடாது

## திரியாய் அகதிகள் கழகத் தலைவர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், டிச.10

உணவு முத்திரை வழங்குவதால் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து வந்த தமிழ் மக்களின் கஷ்டநிலை தீராது.

இப்படி முல்லைத்தீவு கச்சேரியில் நடந்த மாநாட்டில் திரியாய் அகதிகள் கழகத் தலைவர் திரு க. செல்வராசா கூறினார்.

இம்மாநாட்டுக்கு முல்லைத்தீவு அரச அதிபர் தலைமை வகித்தார்.

திருமலை மாவட்டத்தில் உள்ள திரியாய்க் கிராமத்தில் இருந்து இடம்பெயர்ந்து வந்த தமிழ் அகதிகளுக்கு அரச வழங்கும் உணவுப் பொருள் நிவாரணம் நவம்பர் முதலாம் திகதி முதல் நிறுத்தப்பட்டு விட்டதாக மாநாட்டில் அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து தான் திரியாய் அகதிகள் கழகத் தலைவர் திரு. செல்வராசா மேற்கண்ட எதிர்ப்பை தெரிவித்தார்.

தமிழ் அகதிகள் மீண்டும் பழைய இடங்களுக்குச் சென்ற பின்னர் உணவு முத்திரை வழங்கலாம் என்றும் அந்த நிலை ஏற்படும் வரை முல்லைத்தீவு மாவட்டத்தில் [illegible] துள்ள திருமலை அகதிக[illegible] உணவுப் பொருள்கள் நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் திரு. செல்வராசா கேட்டுக் கொண்டார்.

திருமலை இடம் பெயர்ந்தோர் சங்கச் செயலாளர் திரு. ராஜா, முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சமாதான நீதிவான் திரு. கே. தியாகராஜா ஆகியோரும் இதனை ஆதரித்துப் பேசினர்.

தொடர்ந்து திருமலை அகதிகளுக்கு அரசு நிவாரணம் இடைக்க புனர் வாழ்வு அமைச்சுடன் தொடர்பு கொள்ளும் படி [illegible] மாநாட்டில் கேட்டுக் கொள்ளப்பட்டார். (இ-எ)

இதோ! வெளிவந்துவிட்டது!
ஹப்பி அளிக்கும்
ஜோ. எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
கிறிஸ்மஸ் பாடல்கள்
அடங்கிய கஸட்
(PRE RECORDED CASSETTEES)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்!
விலை ரூபா 35/- மட்டுமே!
நாடுங்கள்:
சண்முகம் ட்ரேட்ஸ்
பிரதான வீதி,
(சின்னக்கடை சந்தி)
யாழ்ப்பாணம்.
Zenith Ads.

இதோ! வெளிவந்துவிட்டது!
ஹப்பி அளிக்கும்
ஜோ. எகட்டனின் தயாரிப்பில்
16 முத்தான
கிறிஸ்மஸ் பாடல்கள்
அடங்கிய கஸட்
(PRE RECORDED CASSETTEES)
உங்கள் முத்துக் குவியல்களைத் தெரிவு செய்திட முந்துங்கள்
விலை ரூபா 35/- மட்டுமே!
நாடுங்கள்:
ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங்
19/3, கொழும்புத்துறை வீதி,
கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
Zenith Ads.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

கல்லின் மீது சந்தனக் கட்டையைத் தேய்த்தால் மணத்தை முகர்வது போல பூவைக் கையில் எடுத்தால் வாசனையை அறிவது போல கடவுளைப் பற்றி எப்போதும் நினைப்பதால் ஆத்மீக விழிப்பு ஏற்படும்.

— அன்னை சாரதாதேவி.

உதயன்

இல.15 2ஆவது ஒழுங்கை　தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி,　22073
யாழ்ப்பாணம்.　10-12-1986 த.பெ இல.23

# தமிழ் மக்களின் மனித உரிமைகள்

உலக நாடுகள் பலவற்றிலும் இன்று ஐ.நா. மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது. இல்லையேல் நினைவு கூரப்படுகிறது.

ஒவ்வொரு மனிதனினதும் அடிப்படை உரிமைகள் வழுவின்றிப் பேணப்படவேண்டும். அதற்கான சகல உத்தரவாதங்களையும் அரசாங்கங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும். மனித உரிமை மீறல்களை சட்டரீதியாகத் தண்டிக்க வேண்டும். இவ்வாறான பல சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியது மனித உரிமைகள் சாசனம்

பிரஸ்தாப சாசனம் 1948 டிசம்பர் பத்தாம் திகதியன்று ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது இந்தப் பிரகடனத்தில் ஐ. நா. வின் உறுப்பு நாடுகள் அனைத்தும் கையொப்பம் இட்டுள்ளன.

மனித உரிமைகள் சாசனத்தை ஏற்றுக்கொண்டு, பிரகடனத்தில் கையொப்பமிட்ட நாடுகளில் சிறிலங்காவும் ஒன்றாகும். ஆனால் மனித உரிமைகளுக்கு சிறிலங்கா எந்தளவுக்கு மதிப்பளித்து அவற்றைப் பேணுகிறது என்பது பெரும் கேள்விக்குறியே.

மனித உரிமைகள் சாசனத்தில் உள்ள முக்கிய அம்சங்களில் ஒன்று சுய நிர்ணய உரிமை. அதாவது ஒருவன் தனது தலைவிதியை — தனது வாழ்க்கையை தானே நிர்ணயித்துக் கொள்வதற்கான உரிமை அது.

ஆனால் சிறிலங்கா அரசு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வழங்க மறுக்கிறது. தங்களைத் தாமே ஆள வேண்டும் என்று அவர்கள் 1977 பொதுத் தேர்தலில் மேற்கொண்ட முடிவை நடைமுறைப்படுத்தத் தடை விதித்திருக்கிறது.

1977 பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் அளித்த தீர்ப்பை அவர்களது முடிவாக ஏற்றுக் கொள்வது ஆகாது என்று அரசு கருதி இருக்கக் கூடும். அவ்வாறாயின் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆள விரும்புகிறார்களா அல்லது வெளியார் ஆள்வதை விரும்புகிறார்களா என்பதை அறிவதற்கு அவர்கள் மத்தியில் ஒரு சர்வசன வாக்கெடுப்பை நடத்தி இருக்க வேண்டும். அவ்வாறு செய்யாது தமிழர்கள் தமது தலைவிதியை நிர்ணயிக்கும் தனிப்பெரும் மனித உரிமையைப் பறித்து விட்டது.

மக்கள் ஆட்சியில் முதன்மையானது இறைமை.

சிறிலங்காவின் 1972 அரசமைப்புச் சட்டமாயினும் சரி, 1978 அரசமைப்புச் சட்டமாயினும் சரி வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உடன்பாட்டுடன், அங்கிகாரத்துடன் நிர்ணயிக்கப்படவில்லை.

பெரும்பான்மையினர் ஆணையை மட்டுமே பெற்று இயற்றப்பட்ட அந்த அரசமைப்புச் சட்டங்களை அரசு தமிழ் மக்கள் மீது திணித்தது; திணிக்கிறது இது தமிழ்மக்களின் இறைமையை பறித்தமைக்கு — இல்லை, இல்லை — கொள்ளை அடித்தமைக்குச் சமனாகும்;

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, இறைமை ஆகிய மிகப் பெரும் மனித உரிமைகளைக் கபளீகரம் செய்த சிறிலங்கா அரசுக்கு சாதாரண மனித உரிமைகளை மீறுவது பெரிய காரியம் அல்லவே!

தமிழ் மக்களின் இன அழிப்பு, பண்பாட்டுப் படுகொலைகள், சித்திரவதை, காணமற் போவோர் ஆகியவை சிறிலங்கா அரசைப் பொறுத்தமட்டில் சின்ன விடயங்கள்!

காணமற் போவோர் விவகாரம், தடுப்பு முகாம்களில் சித்திரவதை ஆகியன குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையுடன் பொருதுவதற்கு சிறிலங்காவின் மந்திரிப் பிரதானிகளில் ஒருவரான திரு. லலித் அத்துலத் முதலி அமெரிக்கா சென்றிருக்கிறார்.

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமையை அமுக்கி விட்டு, அவர்களின் இறைமையை கபளீகரம் செய்து விட்டு அவர்கள் அடிமைகளாக வாழவில்லை என்று வாதாட அமைச்சரை அமெரிக்கா அனுப்பி இருக்கிறது அரசு.

இந்த அநீதிகள் யாவும் தெரிந்திருந்தும் ஐ.நா வில் அங்கம் வகிக்கும் எந்த ஒரு நாடுதானும் தமிழர் பிரச்சினையை அந்த உலக சபையில் முன்வைக்க முன்வரவில்லை.

சிறிலங்கா அரசின் அடாத்துகள் இன்னும் உலக நாடுகளின் கண்களுக்குத் தெரியவில்லையா? அவற்றின் மனங்களை உறுத்தவில்லையா?

இலங்கைத் தமிழ் இனம், அடிமைகளாக, அடிப்படை உரிமைகள் எதுவுமே இன்றி அல்லற்படுகிறது, அழித்து ஒழிக்கப்படுகிறது என்பதனை உலக நாடுகளுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.

அதற்கான தகுந்த பிரசாரத்தளம் அவசியம். இன்று போன்ற முக்கிய தினங்களில் தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் விதத்தில் அகிம்சை வழிப் போராட்டங்களைப் பரந்த அளவில் — இங்கு மட்டுமன்றி வெளிநாடுகளிலும் - நடத்துவது தமிழரின் நிலையை எடுத்துக் காட்டப் பெரிதும் உதவும்.

# பிரான்ஸில் மாணவர் போராட்டம் வெற்றி

## பல்கலைக் கழக சீர்திருத்தச் சட்டம் வாபஸ்

பாரீஸ், டிச. 9

மாணவரின் கிளர்ச்சிக்கு பணிந்து பிரெஞ்சு அரசாங்கம் பல்கலைக்கழகச் சீர்திருத்தச் சட்டமூலத்தை வாபஸ் வாங்கியது.

அத்துடன் அச்சட்டமூலத்தைத் தயாரித்த உயர்கல்வி அமைச்சரின் ராஜினாமாவையும் பிரெஞ்சுப் பிரதமர் சிறாக் ஏற்றுக் கொண்டார்.

பல்கலைக்கழக மாணவர் மூன்று வாரங்களாக நடத்திய பிரமாண்டமான கிளர்ச்சிகளைத் தொடர்ந்து பிரெஞ்சுப் பிரதமர், கடந்த திங்கள் டெலிவிஷனில் தோன்றி சட்டமூலத்தை வாபஸ் வாங்கும் முடிவை அறிவித்தார்.

மாணவரின் ஆதரவு இல்லாமல் பல்கலைக் கழகச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள முடியாது என்று, கடந்த மார்ச்சில் பதவிக்கு வந்த பிரதமர் சிறாக் தெரிவித்தார்

- தொடர்ந்து நிலவும் பதற்ற நிலையால் அரசுக்கு பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கு குறைவது,
- கிளர்ச்சிகள் வன்முறைச் சம்பவங்களாக மாறுவது,
- அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் நடுநிலைக்கட்சி உறுப்பினர்கள் மாணவருக்கு ஆதரவு வழங்குதல் –

மேற்கண்ட காரணங்களுக்காகத்தான் பிரெஞ்சு அரசு, பல்கலைக் கழகச் சீர்திருத்தச் சட்டமூலத்தை விலக்கிக் கொண்டது என்று பி.பி.சி வானொலி அறிவித்தது.

மாணவர் கிளர்ச்சியில் ஒரு மாணவன் உயிரிழந்தான். மற்றொரு மாணவன் கண்ணை இழந்தான். (இ - எ)

## வெளி உலகில்

# தெற்கு ஆபிரிக்க நாடுகளுடன் அமெரிக்கா நெருங்கிய உறவு

வாஷிங்டன், டிச. 9

தெற்கு ஆபிரிக்க நாடுகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பை அமெரிக்கா ஏற்படுத்தும் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷூல்ட்ஸ் அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க ராஜாங்க அமைச்சு உதவிச் செயலாளர் மைக்கல் ஆர்ம்கோஸ்ட் விரைவில் இது குறித்து கறுப்பு இன நாடுகளுக்கு விஜயம் செய்து பேச்சுக்கள் நடத்த இருக்கிறார் என்றும் திரு. ஜோர்ஜ் ஷூல்ட்ஸ் தெரிவித்தார்.

அமெரிக்க வர்த்தகர்கள் மத்தியில் பேசுகையில் இத்தகவல்களை திரு. ஷூல்ட்ஸ் வெளியிட்டார்.

உதவிச் செயலாளர் திரு, ஆர்ம்கோஸ்ட் முதலில் சிம்பாப்வே செல்வார். பின்னர் மொஸாம்பிக், மலாவி, சாம்பியா ஆகிய நாடுகளுக்கும் செல்வார்.

இதனிடையில் தென் ஆபிரிக்க வெளியுறவு அமைச்சர் பிக் போத்தா அமெரிக்க அமைச்சரின் பேச்சைக் கண்டித்திருக்கிறார்.

கம்யூனிசத்துக்கும் பயங்கரவாதத்துக்கும் இடையேயான யுத்தத்தில் அமெரிக்கா எங்கே நிற்கிறது என்பது விரைவில் தீர்மானிக்கப்பட வேண்டும் என்று தென் ஆபிரிக்க அமைச்சர் போத்தா அறிவித்திருக்கிறார்.

பல இன மக்களின் ஜனநாயக ஆட்சி ஒன்றை அமைப்பதற்கான பேச்சுக்களை தென் ஆபிரிக்க அரசு ஆரம்பிக்க வேண்டும் என்ற அமெரிக்க அமைச்சரின் கூற்றில் புதிதாக ஒன்றும் இல்லை என்று தென் ஆபிரிக்க அமைச்சர் தெரிவித்திருக்கிறார். (இ - எ)

# பிலிப்பீன்ஸுக்கு எதிராக சதி வேண்டாம்

## றேகன் எச்சரித்தாராம்

வாஷிங்டன், டிசம்பர் 9

பிலிப்பீன்ஸ் அரசுக்கு எதிராகச் சதி நடத்த வேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சராக இருந்த என்ரைலை இரண்டு தூதர்களை அனுப்பி அமெரிக்க அதிபர் றேகன் எச்சரித்தார் என்று அறிவிக்கப்படுகிறது.

'யு எஸ் நியூஸ் – வேர்ல்ட் றிப்போர்ட்' வார சஞ்சிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது

அமெரிக்க அதிபரின் இரண்டு தூதர்களான ரே கிளைன், ரொபர்ட் கவெய்ட்சர் ஆகியோர் முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் என்ரைலுடன் மூன்று மணித்தியாலங்கள் உரையாடினர் என்றும் அந்த சஞ்சிகையில் கூறப்பட்டுள்ளது. (இ-எ)

### அமெரிக்கா கருத்து

வாஷிங்டன், டிச. 9

ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவின் இந்திய விஜயம் இரண்டு நாடுகளுக்கு இடையேயானது என்றே அமெரிக்கா கருதுகிறது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் இக்கருத்தை வெளியிட்டார். (இ - எ)

### ஜப்பானிய நாடாளுமன்றம்

டோக்கியோ, டிச. 9

ஜப்பான் நாடாளுமன்றத்தின் 108 ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகும்.

இக்கூட்டத்தொடர் 150 தினங்கள் நீடிக்கும். (இ-எ)

### கவர்னராக சார்ள்ஸ்?

லண்டன், டிச 9

ஹொங்கொங்கின் கவர்னராக சார்ள்ஸ் இளவரசர் நியமிக்கப்படலாம் என்று லண்டன் அரச வட்டாரங்களில் ஊகங்கள் வெளியிடப்பட்டன. (இ-எ)

# நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு புரூணியிலிருந்து உதவி கிடைத்தது

நியூயோர்க், டிச. 9

அமெரிக்க அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் புரூணி நாடும் நிக்கரகுவா அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்களுக்கு ஏராளமாகப் பணம் கொடுத்து உதவியுள்ளது என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

இப்பணம் சுவிஸ் வங்கியின் இரகசியக் கணக்கு ஒன்றின் மூலம் நிக்கரகுவா கிளர்ச்சியாளர்களுக்கு அனுப்பப்பட்டதாக அச்செய்தி மேலும் தெரிவித்தது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் ஷூல்ட்ஸ்கடந்தஜூனில் புரூணி சென்றிருந்தார். அப்போது தனிப்பட்ட முறையில் அவர் விடுத்த வேண்டுகோளை ஏற்றே புரூணி சுல்தான் இந்நிதி உதவிக்கு ஒத்துக் கொண்டார் என்று லாஸ் ஏஞ்ஜல்ஸ் டைம்ஸ் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-எ)

### சுவிஸ்வங்கிக் கணக்கு நிறுத்தம்

பெர்லின், டிச.9

ஈரானுக்கு ஆயுதம் விற்றதால் கிடைத்த லாபத்தை நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு அனுப்பப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சுவிஸ் வங்கிக்கணக்கு இயங்குவது தடை செய்யப்பட்டது.

அமெரிக்க அரசின் வேண்டுகோளின் மீது சம்பந்தப்பட்ட சுவிஸ் வங்கி இக்கணக்கை இடைநிறுத்தி வைத்துள்ளது. (இ-எ)

# வால்ட்ஹெய்ம் மீது விசாரணை இல்லை

வீயன்னா, டிச. 9

ஆஸ்திரிய ஜனாதிபதி குர்ட்வால்ட் ஹெய்மின் நாஸி நடவடிக்கைகள் குறித்த விசாரணையை அமெரிக்கா கைவிடத் தீர்மானித்துள்ளதாகச் செய்தி வெளிவந்து உள்ளது.

ஆஸ்திரிய நாளிதழ் 'டியே பிரஸ்ஸே' இச்செய்தியை வெளியிட்டது.

ஜனாதிபதி பற்றிய விசாரணையை நடத்த அமெரிக்க நீதி அமைச்சு முன்னர் தீர்மானித்து இருந்தது. (இ-எ)

# எல்லை கடந்து வந்த 4 சீக்கியர் சுடப்பட்டனர்

புதுடில்லி, டிச. 9

பாகிஸ்தானில் இருந்து சர்வதேச எல்லைக்கூடாக இந்தியாவினுள் நுழைந்த 4 சீக்கியத் தீவிரவாதிகளை இந்திய எல்லைப் படையினர் சுட்டுக் கொன்றனர்.

24 சீக்கிய இளைஞர் உட்பட 47 பேர் கைது செய்யப்பட்டனர்.

24 மணித்தியாலங்களில் இச்சம்பவம் இடம்பெற்றதாக பி. ரி. ஐ. அறிவித்தது. (இ - எ)

# 600 ஏக்கர் அரச காணியில் சிங்கைநகர் மாதிரிக கிராமம்

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அருகில்

வடமராட்சிப்பகுதியில் 600 ஏக்கர் அரச காணியில் மாதிரிக் கிராமமும் பனந்தோட்டமும் அமைக்கப்படவுள்ளன. இது வடமராட்சிப் பகுதியில் உள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அருகாமையிலுள்ள இடத்தில் உருவாக்கப்படும்.

16ம் 17ம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாண இராசதானியாக இருந்த சிங்கைநகர் இராசதானி தற்போதுள்ள வல்லிபுர ஆழ்வார் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்ததென சரித்திர ஆய்வாளர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

இதனால் அடுத்த ஆண்டு முதல் அப்பகுதியில் அமைக்கப்படவுள்ள மாதிரிக் கிராமத்தை சிங்கைநகர் எனப் பெயரிட்டுள்ளனர்.

### மணல் திடல்

இந்நிலம் மணல்திடற் பகுதி. இது முடிக்குரிய நிலமாக இருந்தது. 1956 ஆம் ஆண்டு 128 மத்தியதர குடும்பத்தினருக்கு தலா ஐந்து ஏக்கர் விதம் பகிர்ந்தளிக்கப்பட்டது.

இவற்றில் 17 மத்தியதரக் குடும்பங்கள் மாத்திரம் நிலத்தை அபிவிருத்தி செய்தன. ஏனைய குடும்பங்கள் எதுவித அபிவிருத்தி நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாததால் அவற்றுக்கு வழங்கப்பட்ட காணி உத்தரவுப்பத்திரத்தை அரசாங்க அதிபர் ரத்துச் செய்துள்ளார். பனை அபிவிருத்திச் சபை இந்நிலத்தை யாழ் அரசாங்க அதிபரிடமிருந்து பெற்று சிங்கை நகர் ஒருங்கிணைந்த மாதிரிப் பனந்தோட்டத்தை தனது நேரடிக் கண்காணிப்பில் நிர்வகிப்பதுடன் பல்வேறு பொதுஸ்தாபனங்களையும் இந்த அபிவிருத்தித் திட்டத்தில் ஈடுபடுத்த உள்ளது.

### பொதுஸ்தாபனங்கள்

வடமராட்சிப் பகுதியிலுள்ள பின்வரும் பொதுஸ்தாபனங்களுக்கு வடமராட்சி வடக்கு, கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் காணியை ஒதுக்கீடு செய்துள்ளார்.

இப் பொதுஜன ஸ்தாபனங்கள் அங்கத்தவர்களைத் தெரிவு செய்து சிபார்சு செய்ய வேண்டும்.

1. பருத்தித்துறை – புலோலி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம்– 100 ஏக்கர்
2. அறவழி போராட்டக்குழு – 50 ஏக்கர்
3. வதிரி அபிவிருத்தி நிறுவனம் – 25 ஏக்கர்
4. கட்டைவேலி – உடுப்பிட்டி தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் – 50 ஏக்கர்
5. புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - 50 ஏக்கர்
6. தென் புலோலி உதயசூரியன் சனசமூக நிலையம் – 50 ஏக்கர்
7. பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் – 50 ஏக்கர்
8. வதிரி தமிழ் மன்றம் – 15 ஏக்கர்
9. பனை அபிவிருத்திச் சபை – 210 ஏக்கர்

தெரிவு செய்யப்படும் அங்கத்தவருக்கு மாதாமாதம் ரூபா 200 பனை அபிவிருத்திச் சபையால் ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படுவதுடன் இவர்களின் நன்மை கருதி 25 முட்டையிடும் கோழிகள், இறைச்சிக் கோழி (புரைலர்) குஞ்சுகள்– 100, இரண்டு சோடி முயல்களும் அவற்றை வளர்ப்பதற்குரிய பெட்டிகளும், கதலி வாழைக்குட்டிகள் – 10 சாம்பல் வாழைக்குட்டிகள் – 10, பத்துத்திராட்சை நாற்றுக்கள், புதிய இன (கோமாரி) நிலக்கடலை 1 அந்தர் மற்றும் குறுகிய காலத்தில் இலாபம் பெறும் விதைகள் ஆகியன இலவசமாக வழங்கப்படும்.

இம்மாதிரிக் கிராமத்தில் வசிப்போர் தமக்கென வழங்கப்பட்ட காணியினுள் பத்து அடி தூரத்திற்கு சவுக்கு, மரமுந்திரிகை என்பனவற்றையும் வேம்பு, இலுப்பை, புளி, விளாத்தி, வில்வை, நெல்லி போன்ற மரக்கன்றுகளை நட்டு பராமரிக்க நடவடிக்கை எடுப்பதுடன் எல்லை வேலிகளில் சதுரக்கள்ளித் துண்டங்களையும், நொச்சி, இப்பில் இப்பில், முத்தாமணக்கு முதலியவற்றையும் பயிரிட வேண்டும்.

### மண்அரிப்பை தடுக்க

இவர்கள் மண்ணரிப்பைத் தடுப்பதற்கு முக்கியமாக அறுகம்புல்லு பரம்ப வேண்டும். இப்பகுதியில் வசிக்கவுள்ளோர் திட்ட விவசாய ஆலோசகரின் அனுமதியும் ஆலோசனையும் இன்றி தன்னிச்சையாக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது.

இம்மாதிரிப் பனந்தோட்ட ஒருங்கிணைப்புக் கிராமத்தில் குடியிருப்புக்களை மேற்கொள்ளவுள்ளோருக்கு பனை அபிவிருத்திச்சபை இரண்டு மண்வெட்டி, 1 அலவாங்கு, ஒரு கத்தி, ஒரு கோடரி மற்றும் தேவையான அளவு உரப்பசளை, கோழித்தீன் ஆகியவற்றைத் தேவைக்கேற்ப இலவசமாக வழங்கி ஊக்குவிக்கவுள்ளது.

அடுத்த ஆண்டு முற்பகுதியில் சிங்கைநகர் மாதிரிக் கிராமமும் ஒருங்கிணைந்த மாதிரிப் பனந்தோட்டமும் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகவுள்ளதால் முதலில் சிரமதான மூலம் சகல காணிகளுக்கும் செல்லும் பாதை அமைப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளன என பனை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ளது.

இம்மாதிரிக் கிராமத்தில் சகல வசதிகளுடன் கூடிய பாலர் பாடசாலை, ஆரம்ப பாடசாலை, அரசினர் வைத்தியசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை, தபால் போக்குவரத்து வசதிகள், பொதுக் கிணறுகள், சன சமூக நிலையம் என்பனவும் அமைக்கப்படுமென சிங்கைநகர் மாதிரிக்கிராமமும் ஒருங்கிணைந்த மாதிரிப்பனந்தோட்டமும் அமைக்கவுள்ள பனை அபிவிருத்திச் சபைக் குழுவினரின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. (இ- 118)

# காந்திய வாழ்வு சுபீட்சம் நிறைந்த பெருவாழ்வு தரும்

சுன்னாகம், டிச. 10

காந்திய வாழ்வு எமது எதிர்கால சந்ததியினருக்கு சுபீட்சம் நிறைந்த பெருவாழ்வைப் பெற்றுத் தரும். ஆடம்பரத்துக்கு அடிமையாகாத சமுதாயம் உண்மைக்கும் நேர்மைக்கும் மதிப்பளிக்கும்.

சிவதர்ம வள்ளல் க. கனகராசா இவ்வாறு குறிப்பிட்டார்.

ஏழாலை சைவசமய அபிவிருத்திச் சங்கத்தினர் சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நடத்திய வன மகோற்சவ விழாவில் திரு. கனகராசா மேலும் பேசுகையில் ஆத்மீக உணர்வை எம்மிடையே மேம்படுத்த எமது உணவில் இலை வகைகளைச் சேர்க்க வேண்டும்.

விநோபாபாவே, காந்தி மகான் போன்றோர் இதை வலியுறுத்தியுள்ளனர்.

இன்று நாம் இலை வகைகளை உணவில் தவிர்த்துக் கொள்வது வருந்தத்தக்கது என்றார்.

சமாதான சபைத் தலைவர் திரு. சி. சிவஞானசுந்தரம் மங்கல விளக்கேற்றினார். திரு. சி. சக்திகிரீவன் தலைமை வகித்தார்.

பண்டிதர் மு. கந்தையா, சைவப்புலவர் ச. சச்சிதானந்தசிவம் உட்பட பலர் உரையாற்றினர்.

சைவ சன்மார்க்க வித்தியாசாலை அதிபர் திரு. நா. நடேசன் நன்றியுரை வழங்கினார். (இ - 27)

### பகிரங்க விசாரணை நடத்தக்கோரிக்கை

காத்தான்குடியில் ஊர்காவல் படையினரால் இ. போ. ச. ஊழியர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் குறித்து பகிரங்க விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மட்டக்களப்பு பிரசைகள் குழு. ஜனாதிபதியைத் தந்திமூலம் கேட்டுள்ளது (இ-எ-21)

### பொய்யாமொழி



**குறள்:**

கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.

**பொருள்:**

கொலைத் தொழிலினராகிய மக்கள், அதன் இழிவை ஆராய்ந்தவரிடத்தில், புலைத்தொழிலுடையவராய்த் தாழ்ந்து தோன்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
* தரமான வர்ண நிழற்படப் பிரதிகளை
* கம்பியூட்டர் முறையில்
* குறைந்த செலவில்
* சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ளலாம்.

# உதயன்

10 : 12 : 1986 புதன்கிழமை

வர்ணப் புகைப்படப் பிரதி ஒன்று
ரூ. 5/- மட்டுமே!
* Processing Free (நெகடிவ் செய்ய இலவசம்)
* வர்ண புகைப்படச் சுருள்கள் விற்பனைக்கு
KODAK — FUJI — KONICA
SAKURA — FORTE — TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23628

# 3 மாகாணசபை யோசனையை மானம் உள்ள தமிழன் ஏற்கமாட்டான்

## சம்பந்தன் கூறுகிறார்

சென்னை, டிச. 9

கிழக்கு மாகாணத்தை மூன்று மாகாணசபைகளாக பிரிக்கும் யோசனைகளை மானம் உள்ள எந்தத் தமிழனும் ஏற்க மாட்டான்.

இப்படி திருகோணமலை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்திருக்கிறார்.

மிகக் கொடூரமான யோசனை இது. மட்டக்களப்பு, திருகோணமலை என்று பிரிக்க முடியாது. இரண்டுமே தமிழரின் பாரம்பரிய பிரதேசங்கள்.

திருமலை மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு வந்த ஒவ்வொரு எம். பியும் தமிழரே.

1977 க்குப் பின்னர் சேருவில சிங்களத் தொகுதி உருவாக்கப்பட்ட பின்னரே சிங்களவர் ஒருவர் எம்.பியாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மட்டக்களப்பில் 70 சதவீதமானோர் தமிழர். திருமலை மாவட்டத்தில் 67 சதவீதமானோர் தமிழர்.

கிழக்கு மாகாணத்தில் சிங்களவர் கணிசமான அளவு அதிகரித்ததற்குக் காரணம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை அரசாங்கம் நடத்தியதே ஆகும்.

இப்படி திரு. சம்பந்தன் சென்னையில் பத்திரிகையாளரிடம் கருத்துத் தெரிவித்தார். (இ-எ)

## பெங்களூர் பத்திரிகை மன்னிப்பு கோரியது

பெங்களூர், டிச. 9

முஸ்லிம்களின் மனதைப் புண்படுத்தக் கூடியதான சிறுகதை ஒன்றைப் பிரசுரித்ததற்காக பெங்களூர் நாளிதழான 'டெக்கான் ஹெரால்ட்' இரண்டாவது தடவையாக மன்னிப்புக் கோரியது.

இந்த மன்னிப்பு அறிவித்தல் அப்பத்திரிகையின் முன் பக்கத்தில் வெளியிடப்பட்டது.

பத்திரிகை நிர்வாகம் மன்னிப்புக் கோரியதைத் தொடர்ந்து, கிளர்ச்சிகளைக் கைவிடும்படி முஸ்லிம்களை இந்திய உள்துறை அமைச்சர் பூட்டா சிங் கேட்டுக் கொண்டார்.

## வவுனியாவில் இளைஞர்கள் கைது

வவுனியா, டிச.10

நேற்றுக் காலை 9 மணி அளவில் வவுனியா ஈரப் பெரியகுளம் முகாமில் இருந்து ஐம்பதுக்கும் மேற்பட்ட சிப்பாய்கள் வெளியேறி நடைபவனியாக ரோந்துசென்றனர்.

குருமண்காடு, வேப்பங்குளம் பகுதியில் சென்று தேடுதல் நடத்திய சிப்பாய்கள் பல இளைஞர்களை கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றனர் என்று தெரிய வருகிறது. (இ-10)

# சொந்தத் தொகுதிக்கு செல்லமுடியாத கிழக்கின் தமிழ் எம்.பி.க்களுக்கு அனுதாபம்

கொழும்பு, டிச 10

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரச தமிழ் எம் பி. க்கள் சொந்த ஊர்களுக்கே செல்ல முடியாத நிலை இன்று உள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்தவர்கள் தான் இன்று அரசாங்கத்துடன் இருக்கும் தமிழ் எம். பி.க்கள் ஆவர்.

இப்படி அத்தனகலை எம். பி. லக்ஷ்மன் ஜயக்கொடி நாடாளுமன்றத்தில் பேசுகையில் சொன்னார்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீடு சம்பந்தமான விவாதத்தில் பேசுகையில் திரு. ஜயக்கொடி மேலும் சொன்னதாவது;

கிழக்கு மாகாண தமிழ் எம்.பி. க்களின் நிலை குறித்து நாம் அனுதாபப் படுகிறோம்.

அவர்கள் தமது சொந்தத் தொகுதிகளுக்குச் சென்று மக்கள் குறைகளை அறிய முடியாது கொழும்பிலேயே இருக்கிறார்கள்.

கொழும்பு றோயல் கல்லூரியில் படிக்கும் தமிழ் மாணவரை சந்தேகப்பட்ட காலம் இருந்தது எதிர்காலத்தில் இந்த நிலை ஏற்பட விடக் கூடாது.

இப்படி திரு. ஜயக்கொடி தெரிவித்தார். (இ-ஐ-எ)

## திருவாசகம் முற்றோதல்

யாழ்ப்பாணம்,, டிச 10

திருவாசகம் முற்றோதல் நிகழ்ச்சி இம்மாதம் 14ஆம் திகதி காலை 8மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் இடம் பெறும்.

அதே நேரத்தில் ஆதீனத்தில் கடந்த திங்கள் முதல் திருவெம்பாவை விதி பஜனை, விசேட பூஜை, ஆராதனைப் புராண படனங்கள் நடைபெறுகின்றன.

இம் மாதம் 17 ஆம் திகதி புதன் ஆருத்திரா தரிசனம் நிகழும். (தி-எ)

# தச்சு, மேசன் தொழிற் பயிற்சிக்கு ஆட் சேர்ப்பு

யாழ்ப்பாணம், டிச. 10

தச்சு, மேசன் தொழில் பயிற்சியாளர்களுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் தொழில் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இத்தொழில் பயிற்சி பெறவிரும்பும் யாழ் மாவட்ட வாசிகள் ஜனவரி முதலாம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதியில் உள்ள உதவித் தொழில் ஆணையாளர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கும் படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

விண்ணப்பத்தாரர்கள் 18-40 வயதுக்குட்பட்டவராகவும் 5 ஆம் வகுப்பு சித்தி அடைந்தவராகவும் இருக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிக்காலம் 9மாதங்களாகும். பயிற்சிக் காலத்தில் நாள் ஒன்றுக்கு 5 ரூபா ஊக்குவிப்புப் பணமாக வழங்கப்படும். (இ-எ)

## மனித உரிமை மீறலை எதிர்த்து பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், டிச 10

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு இன்று மனித உரிமைகள் மரணிப்பதை எதிர்த்துப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினர் சார்பில் இன்று மாலை 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இக் கூட்டம் நடைபெறும். (இ-10)

# பாடசாலையை விட்டு விலகும் மாணவருக்கு தொழில்கல்விப் பயிற்சி

யாழ்ப்பாணம், டிச. 10

பாடசாலைகளை விட்டு விலகும் மாணவர்களுக்கு தொழில் கல்விப் பயிற்சி நெறிகளை ஆரம்பிக்க யாழ் கல்வித் திணைக்களம் ஆலோசித்து வருகிறது.

யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இதனை தெரிவித்தார்.

பல்கலைக்கழக அனுமதி கிடையாத பல மாணவர்கள் தமது பாடசாலைக் கல்வியின் பின் செய்வதறியாது உள்ளனர்.

எனவே பாடசாலையை விட்டுவிலகும் மாணமர்களுக்கு அவர்களது வாழ்க்கைக்கு உதவும் வகையிலான தொழில் பயிற்சிகளை வழங்க கல்வித் திணைக்களம் உத்தேசித்துள்ளது.

தட்டெழுத்து, தையல் கலை, சிறுகைத்தொழில், பொறியியல், தொழில் நுட்பம் ஆகிய பாடங்களை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான ஆலோசனை அறிக்கைகளை கல்வித் திணைக்களம் அதிபர்கள், பழைய மாணவர்களிடம் கோரியுள்ளது என்று திரு. சுந்தரலிங்கம் கூறினார். (இ-5)

## நேற்று...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிலும் வெள்ளம் பெரும் அளவு காணப்பட்டது.

இதே வேளை இலங்கை முழுவதிலுநேற்றுபலத்த மழை பெய்துள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. (இ-10)

# மட்டுவிலில் நேற்று கண்டனக் கூட்டம்

## இன்று மற்றும் இடங்களில்

யாழ்ப்பாணம், டிச.10

மட்டுவிலில் எமது மாணவர்கள் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதைக் கண்டித்து மட்டுவில் கிராம மக்களின் பூரண ஆதரவுடன் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

அதேபோல் கோப்பாயில் நடைபெற்ற பதை யாத்திரயை குழப்பியோரை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தும் முகமாகவும் வியாழக்கிழமை காலை 11 மணி அளவில் கோப்பாய் தேவாலய முன்றலில் கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்றும் நடைபெறும்.

மாணவர் அமைப்புக் குழு சார்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற் கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கைலாசபதி அரங்கில் மாணவர் பொதுக்கூட்டம் ஒன்றும் இன்று காலை 9மணி அளவில் நடைபெறும்எனவும் இக்குழு அளித்துள்ளது.

இக் கூட்டத்தில் எமது போராட்ட நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் விரிவுரைகள் சம்பந்தமாகவும் சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும்.

கோப்பாயில் நடைபெறும் கண்டனப் பொதுக் கூட்டம் தொடர்பான ஒழுங்கு நடவடிக்கைகளின் போது எம் மீது தாக்குதல் நடக்கலாம் என அஞ்சுவதால் இதற்கு அனைத்து விடுதலை இயக்கங்களிடமும் பாதுகாப்பு கேட்கவுள்ளோம் இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (இ)

## தொண்டமானாறு: வயோதிபர் பலியானார்

யாழ்ப்பாணம், டிச. 10

தொண்டமானாறு இராணுவ முகாம் அருகே சென்ற வயோதிபர் ஒருவர் சிப்பாய்களின் சூட்டுக்குப் பலியானார்.

இச்சம்பவம் திங்கட்கிழமை இரவுநிகழ்ந்தது.

70வயது மதிக்கத்தக்க இந்த வயோதிபரின் சடலத்தை காங்கேசன்துறைப் பொலிஸார் மீட்டெடுத்து யாழ் ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். (இ-10)

## இராணுவம்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஒன்று கூறுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தங்கியிருந்த ஹோட்டல் எம்பரஸ், கொள்ளுப்பிட்டி இ. தொ.கா. தலைமை அலுவலகம், விஜய குமாரணதுங்க வீடு, கொல்வின் ஆர் டி சில்வாவின் வீடு ஆகியவற்றுக்கு வீசப்பட்ட குண்டுகள் எல்லாம் இலங்கை அரச படையினர் பாவிக்கும் 36 எம் ரக கிறனேட்டுக்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டதாம்.

இராணுவ முகாம்களில் இருந்து இக் கிரனேட்டுக்கள் எப்படி வெளியே கொண்டு வரப்படுகின்றன என்பதைக் கண்டு பிடிப்பதில் பொலீஸார் இராணுவ உதவியை நாடியிருக்கின்றனர். (இ-எ)

**விற்பனைக்கு**

ஒரு நாள் HY-LINE பேட்டுக்குஞ்சு அத்துடன்,ஒருமாத இறைச்சிக் குஞ்சுகள் என்பன விற்பனைக்கு உண்டு அத்துடன் ஓடர்களுக்கும் எடுத்துக் கொடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்: ராசா போரேஜ் ஸ்ரோர், நெல்லியடி, (பிரதான சந்தைக்கு முன்பாக)

# வடக்கில் கூட்டுறவின் சின்னம் அமரர் வீரசிங்கம்

## நினைவுதினக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், டிச. 10

வட பகுதி மக்களின் கூட்டுறவின் சாதனைச் சின்னமாக விளங்குபவர் அமரர் வீரசிங்கம்.

சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திரு. சி. சண்முகலிங்கம் இவ்வாறு கூறினார்.

தேசிய கூட்டுறவின் முன்னோடியான அமரர் வீரசிங்கத்தின் நினைவு தினக் கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அவர் மேலும் பேசுகையில்;

1950 இல் இலங்கை தேசிய கூட்டுறவுச்சபையின் முதல் தலைவராக பதவியேற்ற அமரர் வீரசிங்கம்; வடமாகாண தேசிய கூட்டுறவுச் சபையின் தலைவராக 27 வருடங்கள் பணியாற்றி சாதனை புரிந்துள்ளார்.

அவரது அத்திவாரமும்; அவரது வாரிசுகளின் உழைப்புமே இன்று கூட்டுறவுத்துறையை உயர்த்தியுள்ளது.

இப்படி அவர் கூறினார்.

இந் நினைவுதினக் கூட்டம் தேசிய கூட்டுறவுச் சபைத் தலைவர் திரு. சி. சிவமகாராசா தலைமையில் நடைபெற்றது.

ஐக்கிய நாணய சங்க சமாஜத் தலைவர் திரு. பொ. செல்வரத்தினம் உரையாற்றுகையில்;

விரசிங்கம் ஓர் அபூர்வ மனிதன்; சிறந்த கல்விமான், அஞ்சா நெஞ்சினர், சிறந்த வழக்கறிஞர்; ஓர் சிறந்த விளையாட்டு வீரர்.

அவர் தாம் பயின்ற மானிப்பாய் இந்துக் கல்லூரியில் அதிபராகப் பதவி ஏற்று அக் கல்லூரியை இலங்கையின் முதல்தரக் கல்லூரியாக்கினர் என்றார்.

கூட்டுறவு உதவிஆணையாளர் திரு. எஸ். ஜெகநாதன் உரையாற்றுகையில்;

அரசியல் வாதிகளை எதிர்த்து கூட்டுறவுத் தோழர்களின் ஆதரவால் நாடாளுமன்ற உறுப்பினராக தெரியப்பட்டவர் அமரர் வீரசிங்கம் என்றார்.

கூட்டுறவுப் பாடசாலை உயர் மாணவன் பொ. ஸ்ரீ ராமச்சந்திரன் அஞ்சலிக் கவிதை வாசித்தார். (இ-5)

## புதிய மாடிக் கட்டடம்

புங்குடுதீவு, டிச 10

வேலணை சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நிலவும் இடநெருக்கடியைப் போக்கும் பொருட்டு புதிய மாடிக்கட்டடம் ஒன்று அமைக்கப்படுகிறது. இதற்கான வேலைகள் தற்போது துரிதமாக நடைபெறுகின்றன.

இம்மாடிக் கட்டட வேலைக்காக இரண்டு லட்சம் ரூபா பன்முக வரவுச் செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (இ-131)

## ஜே. ஆரின் அழைப்--

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணங்களின் இணைப்பு.

இந்திய மாநில ஆளுநருக்கு உள்ள அதிகாரங்களை வழங்குவோம் என்று இலங்கை கூறுகின்றது.

ஆனல் இந்தியாவோடு இலங்கையை ஒப்பிட்டு ஆளுநருக்கு விசேட அதிகாரங்களை வழங்க முடியாது.

இணைப்பை, இலங்கை ஜனாதிபதி கடுமையாக எதிர்க்கிறார்.

முரண்பாடு

மட்டக்களப்பை தமிழ் மாகாணமாக அமைக்க ஜனாதிபதி ஒப்புக்கொண்டார். முரண்பாடான நிலை என்ன என்றால் சிங்களவர் பெரும்பான்மையாக இருக்கக் கூடியதான மாகாணமாக திருகோணமலையை மாற்றுவது என்ற இலங்கையின் போக்குத்தான்.

திருகோணமலை மாவட்டத்தின் கடற்கரையோரப் பகுதிகளைப் பிரித்து எடுத்து வடக்கு மாகாணத்துடன் இணைக்கும் யோசனை ஒன்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது ஜெயவர்த்தனவும் அவரது ஆலோசகர்களும் இதனை வன்மையாக எதிர்க்கின்றனர்.

இதை அனுமதித்தால் மட்டக்களப்பு மாகாணத்தையும் வடக்குடன் இணைக்கும் நடைபாதை உருவாகி விடும் என்ற காரணம் காட்டுகிறார்கள்.

திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரம் தமிழர்களின் சரித்திரப்புகழ் பெற்ற இந்து ஆலயம்.

திருகோணமலை, இராமாயண காலச் சிறப்பு மிக்கது என்று கருதப்படுகிறது.

அனுமான் திருகோணமலையில் வந்திறங்கினர் என்று கூறப்படுகிறது.

இப்படி திரு. ரெட்டி எழுதியிருக்கிறார். (அ-ஐ-எ)

## இ. போ. ச...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு 55 வயது வரும் வரை முழுச் சம்பளம் வழங்கப்படவேண்டும்.

* தற்காலிக ஊழியருக்கு போதுமான நட்ட ஈடு வழங்கப்பட வேண்டும்.
* ஊழியர்கள் காலை 6 மணி முதல் மாலை 6மணி வரை மட்டுமே சேவையில் ஈடுபடுவர்.
* ஊழியர் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்பட வேண்டும்.

போக்குவரத்து அமைச்சருடன் தொடர்பு கொண்ட பின்னர் இக் கோரிக்கைகளை கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை நிர்வாகம் ஏற்றுக் கொண்டது.

இதைத் தொடர்ந்து ஊழியர்கள் இன்று முதல் வேலைக்குச் செல்வர் என்று அறிவிக்கப்பட்டது (இ-எ)

**யா / ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**

கந்தரோடை, சுன்னாகம்.

தரம் 6 (ஆண்டு 7):-

பிரவேசப் பரீட்சை
14.12-86 மு.ப. 9.30 மணிக்கு
இடம் — கல்லூரி
பாடங்கள் — தமிழ், கணிதம்.

தரம் 5 (ஆண்டு 6):—

புதிதாக ஆரம்பிக்கப்படும்
இவ்வகுப்புக்கு விண்ணப்ப முடிவுத் தேதி: 22 - 12 - 1986
பிரவேசப் பரீட்சை: 28 - 12 - 1986
பாடங்கள் — தமிழ், கணிதம்
இடம் — கல்லூரி.

அதிபர்.

## புலி இயக்க போராளி மரணம்

யாழ்ப்பாணம், டிச. 10

மூதூர்த் தொகுதியில் தோப்பூர் முகாமில் இருந்து வெளியேறிய ஆயுதபடையினர் தன்னந்தனியே வந்த தமிழீழ விடுதலைப் புலி இயக்கப் போராளி ரங்கனை சுற்றி வளைத்துச் சுட்டனர்.

இதில் ரங்கன் வீரமரணம் அடைந்தார்.

ரங்கன் தம்பலகமம் கிராமத்தைச் சேர்ந்தவர்.

அவருக்கு வீரவணக்கம் செலுத்தி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அறிக்கை விடுத்துள்ளது. (இ-எ)

# தொற்று நோய்களிலிருந்து தமிழ் மக்களை காப்பாற்ற ஆரம்ப சுகாதார நிலையங்கள்

சுன்னாகம், டிச. 10

அரச சுகாதார உதவிகளை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்களை தொற்று நோய்களுக்கு இரையாக்க முடியும் என கனவு கண்டோர் ஆரம்ப சுகாதார நிலையங்களின் புனிதமான பணி கண்டு கலக்கம் அடைந்துள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சி எஸ். நச்சினார்க்கினியன் இவ்வாறு கூறினார்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் ஆரம்ப சுகாதார நிலையங்களின் ஓராண்டு நிறைவு விழாவையும் நடமாடும் வைத்திய பிரிவையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்து அவர் பேசினார்.

விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு நடமாடும் வைத்திய பிரிவு அம்புலன்ஸை நடமாட ஆரம்பித்து வைத்த பின்னர் பேசிய அவர் "யாழ் குடாநாட்டில் 70 சதவீதமான சிறார்கள் போஷாக்கின்மையால் பிணியாளராகும் நிலை ஏற்பட்டுள்ளது. சிறார்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன் நின்றுவிடாது சிறார்களுக்கு நோய் வராமல் தடுக்கவும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் உதவவேண்டும் என்றார்.

உடுவில் உதவி அரச அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் பேசுகையில் பாதுகாப்பற்ற சூழலில் வாழும் மக்களை நோய்களில் இருந்து பாதுகாக்க ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளப்பரிய பணி புரிந்துள்ளன என்றார்.

தேசிய கூட்டுறவுச் சபை தலைவர் திரு. சி. சிவமகாராசா, துர்க்கா துரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி, உதவி அரச அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம், சிமெந்து கூட்டுத்தாபன முகாமையாளர் திரு எஸ். ஜெயகுமார், சுன்னாகம் பலநோ. கூ. சங்க முதல்வர் திரு. சி. குமரவேல், தெல்லிப்பளை இந்து இளைஞர் சங்கத் தலைவர் திரு. நா. தவநாதன், வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன், வைத்தியகலாநிதி சி. கதிரவேற்பிள்ளை உட்படப் பலர் பேசினர். (இ-27)

## சிங்கராயர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யுள்ளது என்று பிதா சிங்கராயர் சொன்னார்.

வைத்திய உதவிகோருபவருக்கு உதவ வேண்டியது என் கடமை என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

இப்படி டாக்டர் சேவியர் சொன்னார்.

எதிரிதரப்புச் சட்டத்தரணி பாலாதம்புருக்கு விசாரணை செய்தார்.

மேல் விசாரணையை மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் டிசம்பர் 17 க்கு ஒத்தி வைத்தார். (இ-எ)

## ஜோர்ஜ் ஷூல்ட்ஸ் சாட்சியம்

வாஷிங்டன், டிச. 9

ஈரானுக்கு ஆயுதம் விற்பனை செய்தது தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணைகளில் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ஜோர்ஜ்ஷூல்ட்ஸ் சாட்சியமளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 10-12-1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane. Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86. T'PhoneNo. 24805, 22078.